100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து

# மதுரை வடக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!



மதுரை வடக்கு மாவட்டம்

100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

| வ. எண் | ஒன்றியம் / பகுதி/ பேரூர்/அணி | பொறுப்பாளர் பெயர் | கைபேசி எண் | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | சி.சிறைச்செல்வன் | செயலாளர், மதுரை மேற்கு வடக்கு ஒன்றியம் | 9344153950 | சத்திரப்பட்டி<br>செட்டிகுளம் |
| 2 | அ.பா.ரகுபதி | செயலாளர், மதுரை கிழக்கு ஒன்றியம் | 9842165600 | ஒத்தக்கடை<br>தாமரைப்பட்டி |
| 3 | சு.மதிவாணன் | செயலாளர், மதுரை கிழக்கு வடக்கு ஒன்றியம் | 9159227775 | கள்ளந்திரி<br>கடச்சனேந்தல் |
| 4 | எஸ்.முகம்மது அப்துல்காதர் | செயலாளர், மதுரை கிழக்கு தெற்கு ஒன்றியம் | 9443191092 | சக்குடி<br>ஆண்டார்கொட்டாம் |
| மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதி | | | | |
| 5 | ஆர்.கே.ஜெயராமன் | செயலாளர், திருப்பாரன்குன்றம் வடக்கு | 9944007799 | சிக்கந்தர் சாவடி<br>அச்சம்பத்து |
| மேலூர் சட்டமன்றத் தொகுதி | | | | |
| 6 | சா.கிருஷ்ணமூர்த்தி | செயலாளர், கொட்டாம்பட்டி கிழக்கு ஒன்றியம் | 9787666856 | சொக்கலிங்கபுரம்<br>கொட்டாம்பட்டி |
| 7 | பெ.பழனி | செயலாளர், கொட்டாம்பட்டி மேற்கு ஒன்றியம் | 8760542518 | சொக்கம்பட்டி<br>சேக்கிபட்டி |
| 8 | ஞா.ராஜராஜன் | செயலாளர், கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றியம் | 9894511336 | கொடுக்கம்பட்டி<br>அட்டப்பட்டி |
| 9 | ரா.பாலகிருஷ்ணன் | செயலாளர், மேலூர் கிழக்கு ஒன்றியம் | 9842860970 | கீழையூர்<br>வண்ணாம்பாறைப்பட்டி |
| 10 | ரா.ராஜேந்திரபிரபு | செயலாளர், மேலூர் தெற்கு ஒன்றியம் | 9047773837 | திருவாதவூர்<br>வெள்ளலூர் |
| 11 | ரா.குமரன் | செயலாளர், மேலூர் வடக்கு ஒன்றியம் | 9047257584 | கல்லம்பட்டி<br>அழகர்கோவில் |
| சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி | | | | |
| 12 | A.தன்ராஜ் | செயலாளர், அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றியம் | 9786863455 | 15 - பி மேட்டுப்பட்டி<br>வெள்ளையம்பட்டி |
| 13 | எஸ்.பரந்தாமன் | செயலாளர், அலங்காநல்லூர் மேற்கு ஒன்றியம் | 9787313814 | தெத்தூர் மேட்டுப்பட்டி<br>தனிச்சியம் |
| 14 | பால.ராஜேந்திரன் | செயலாளர், வாடிப்பட்டி வடக்கு ஒன்றியம் | 9842076200 | பாலகிருஷ்ணாபுரம்<br>கச்சைகட்டி |
| 15 | க.பசும்பொன்மாறன் | செயலாளர், வாடிப்பட்டி தெற்கு ஒன்றியம் | 9976146988 | குருவித்துறை<br>மேலக்கால் |
| 16 | ச.தனசேகர் | செயலாளர்,மதுரை மேற்கு ஒன்றியம் | 9842121109 | பொதும்பு<br>தேனூர் |

**அமைச்சர் பி.மூர்த்தி,**
செயலாளர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

# ஒன்றிய பட்ஜெட்டும் தமிழ்நாடு பட்ஜெட்டும் ஒப்பீடு!

தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது மக்களுக்கானது. நமது தளபதி மக்களுக்கான திட்டங்களை பார்த்து பார்த்து செய்து வருகிறார். அதனால்தான் அவரைப் பார்க்க பொது இடங்களில் சாமானிய மக்கள் ஓடி வருகிறார்கள். தளபதி மக்கள் உறவு என்பது எதார்த்தமானது. அதில் ஒரு துளி கூட பொய்யில்லை என்பது அவரைப் பார்த்ததும் மக்கள் முகத்தில் தெரியும் சந்தோஷமே சாட்சி.

தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது மிகுந்த கவனத்துடன் சமூகத்தின் பல்வேறு பிரிவினர் நலன் சார்ந்து பல்வேறு பகுதிகளின் வளர்ச்சியை உள்ளடக்கிய ஒரு நேர்த்தியான நிதி நிலைய அறிக்கை அது. மாநிலங்கள் வளர்ச்சி தான் ஒரு தேசத்தின் வளர்ச்சி என்பதை புரிந்த திராவிட மாடல் ஆட்சி தளபதி ஆட்சி. இது ஒன்றிய பாஜக அரசுக்கு தெரிய வாய்ப்பில்லை. திராவிட மாடல் ஆட்சி மாநிலம் சார்ந்தது, மாநிலம் உள்ளடக்கிய தேசம் சார்ந்தது. தமிழகத்தின் நிதிநிலை அறிக்கையில் எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்வதற்கு எந்த விஷயமும் இல்லை. அது அவர்களுக்கு தெரிந்ததுதான். ஆனால் விமர்சனம் செய்யாவிட்டால் அரசியல் பிழைப்பு போய்விடும் என்ற அச்சம் காரணமாக ஏதோ சொல்கிறார்கள் பாவம். பாரதிய ஜனதாவை பொருத்தவரை அறிக்கை பற்றி அவர்கள் சொல்ல முடிந்து இரண்டு விஷயங்கள் தான். ஒன்று ரூபாய்க்கான குறியீட்டை தமிழ் எழுத்தின் மூலம் குறிப்பிட்டதை குறித்து எகிறி குதிக்கிறார்கள். ஏனென்றால் அவர்களைப் பொறுத்தவரை தமிழ் ஒரு பிடிக்காத வார்த்தை. அடுத்து மாநில அரசு கடன் அதிகரித்துள்ளது என்பது. மாநில அரசு கடன் அதிகரித்து உள்ளது என்பதை திராவிட மாடல் அரசு என்றுமே மறுத்து சொல்லியதில்லை. அந்தக் கடன் எந்த அளவுக்கு மக்களுக்கு பயன்படுகிறது என்பதை கடன் வாங்கி விட்டோம் என்று சொல்பவர்கள் சொல்ல மறந்து போகிறார்கள். தமிழகத்தில் வறுமையானது 1.64 சதவீதமாக குறைந்துள்ளது. வறுமை ஒழிப்பு என்று நேர்கோட்டில் தமிழக அரசு பயணிக்கிறது என்பதற்கான சாட்சி தான் இந்த புள்ளி விவரம். அடுத்த ஆண்டு தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 8 சதவீதத்துக்கும் அதிகமாக இருக்கும். இது தேசிய வளர்ச்சி வீதத்தை விட அதிகம். தனிநபர் வருமானம் 1.6 மடங்கு அதிகரிக்கும். உயர்கல்வி செல்வோர் எண்ணிக்கை தேசிய சராசரியை விட அதிகமாக இருக்கும். தளபதி ஸ்டாலினின் திராவிட மாடல் அரசு என்றுமே பிற மாநிலங்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சியை அல்லது நல திட்டங்களை யோசிப்பதில்லை. திராவிடம் மாடல் அரசுக்கு போட்டியே இந்தியா தான். வளர்ச்சியில் தேசத்தின் வளர்ச்சியில் நாம் முதன்மையாக இருக்க வேண்டும் என்ற இலக்கோடு திட்டமிட்டு தான் இது நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.



**எஸ்.ரகுபதி**
சட்ட அமைச்சர்

ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பொருளாதார அறிக்கையை தாக்கல் செய்வது வழக்கம். தமிழக அரசும் அதே போல் பொருளாதார அறிக்கையை சட்டசபையில் தாக்கல் செய்தது. இது எந்த மாநிலமும் யோசிக்காதது. இது இன்னும் சொல்லப்போனால் வெளிப்படையானது. எந்தத் துறையில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். எந்த விஷயத்தில் நாம் அக்கறை காட்ட வேண்டும். எங்கு நாம் பின்தங்கி இருக்கிறோம் போன்றவற்றை இந்த ஆய்வறிக்கை வெளிப்படையாக சொல்லி இருக்கிறது. தமிழகத்தின் பொருளாதார ஆய்வறிக்கை என்பது உண்மையின் உரைக்கல். இந்த அரசு வெளிப்படையான அரசு என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. தமிழ்நாட்டின் வளர்ச்சி மேலும் மேலும் என்று எல்லோரும் பாராட்டும் வகையில் இருக்கிறது. சர்வதேச இந்தியா வளர்ச்சி இவற்றோடு ஒப்பிடும்போது தமிழ்நாடு மற்ற மாநிலங்களை விட எந்த அளவு உயர்ந்து இருக்கிறது என்பதற்கு இந்த பொருளாதார ஆய்வு அறிக்கை ஒரு ஆதாரம். தமிழ்நாட்டின் பொது விநியோக முறை, இலவச மின்சாரம், மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாதம்தோறும் உதவித் தொகை இப்படி மக்களின் அன்றாட பிரச்சனையை மாநில அரசு சுமந்து கொள்வதால் தமிழ்நாட்டில் விலைவாசி கட்டுக்குள் இருக்கிறது.

கல்வி, சுகாதாரம், வறுமை ஒழிப்பு இவற்றில் தமிழ்நாட்டின் வெற்றி எந்த அளவுக்கு என்பதைத்தான் நிதிநிலை அறிக்கை சுட்டிக் காட்டி இருக்கிறது. சிசு மரண விகிதம் தமிழ்நாட்டில் வெறும் நான்கு சதவீதம் தான், ஆனால் தேசிய சராசரி 28 சதவீதம். தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது ஒன்றிய அரசின் வரிப்பகிர்வில் ஜி எஸ் டி சிக்கல்கள் ஒன்றிய போதிய நிதி தராமல் ஏமாற்றுவது இதையெல்லாம் தாண்டி தான் தமிழகத்தின் வளர்ச்சி வியத்தகு வளர்ச்சி என்ற பாதையில் தளபதி அழைத்துச் செல்கிறார்.

தமிழக அரசு கடன் என்பது மாநில அரசின் கடன் வாங்கும் வரம்புக்குள் தான் இருக்கிறது என்ற உண்மை விமர்சனம் செய்யும் மேதாவிகளுக்கு தெரியும்தான். அரசின் பல திட்டங்களுக்கு ஒன்றிய அரசு பாரபட்சம் இல்லாமல் நிதி கொடுத்து இருந்தால் தமிழகத்தின் கடன் குறையும். மாநிலத்தின் உற்பத்தி வளர்ச்சி இவற்றையெல்லாம் மறந்து போய் விட்டு கடன் என்பதை மட்டும் இவர்கள் பேசுகிறார்கள். நமது தேசத்திற்கான ஜிடிபி பங்களிப்பில் தமிழ்நாடு 9 சதவீதத்துடன் இரண்டாவது மாநிலமாக இருப்பதைப் பற்றி இவர்கள் பேசுவதே இல்லை.

சரி தமிழ்நாடு கடன் வாங்குவது ஒரு பக்கம் இருக்கட்டும் கடந்த பத்து ஆண்டுகளாக ஒன்றிய பாஜக அரசு வாங்கிய கடன் எவ்வளவு என்பதை பாஜக ஏன் பேசுவதில்லை ? நரேந்திர மோடி ஆட்சியில் ஒன்றிய அரசின் கடன் தொகை மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது. சென்ற ஆண்டு மார்ச் நிலவரப்படி 155.88 லட்சம் கோடியாக உயர்ந்திருக்கிறது. இந்த ஆண்டு கூட 18 லட்சத்து 60 ஆயிரம் கோடி ஒன்றிய அரசு கடன் வாங்க இருக்கிறது. மத்திய அரசின் கடன் பற்றி பாராளுமன்றத்தில் பெரிய அளவு எந்தத் தகவலும் சொல்வதில்லை, அது பற்றிய விவாதத்துக்கும் ஒன்றிய பாஜக அனுமதிப்பதில்லை.

நிதி ஒதுக்கீடு கூட மாநிலங்களுக்கு ஒன்றிய பாஜக அரசு முறையாக செய்வதில்லை. இதை திராவிட முன்னேற்றக் கழக பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினால் ஆவேசப்பட்டு பாராளுமன்றத்தில் சாமி ஆடுகிறார் நிதி அமைச்சர். எல்லாமே பழைய டேப் மீண்டும் மீண்டும் மறுஒளிபரப்பு.

அதே சமயம் தமிழக அரசை விமர்சனம் செய்யும் வெத்து விமர்சகர்கள் அண்ணாமலை நாடாளுமன்ற நிலை குழுக்களின் அறிக்கைகளை கொஞ்சம் படித்துப் பார்ப்பது நல்லது. பெரும்பாலான துறைகள் திட்டமிட்ட இலக்கை எட்டவில்லை என்ற உண்மை அதில் தெரிகிறது. அதுமட்டுமல்ல தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியையும் அந்த துறைகள் சரிவர பயன்படுத்தப்படவில்லை என்பதே அந்த நிலைக் குழுக்களின் அறிக்கைகளாக இருக்கிறது. இந்த நிலை குழுக்களின் அறிக்கைகளை படித்ததன் மூலம் நமக்குத் தெரிந்தது ஒன்றிய பாஜக அரசின் நிதி நிலை அறிக்கை என்பது பரபரப்பான திட்டங்களை அறிவிப்பது என்பது வெறும் சம்பிரதாய சடங்கு என்று தெரிகிறது. இப்படி இருந்தால் பிரதமர் அடிக்கடி சொல்லும் மூன்றாவது பெரிய பொருளாதார நாடு என்பது வெறும் பேச்சாக தான் இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

2022-23 நிதி ஆண்டில் உணவு பதப்படுத்தும் துறைக்கு 282 கோடி ஒதுக்கப்பட்டு, அது 219 கோடியாக குறைக்கப்பட்டது. அப்படி இருந்தும் பயன்படுத்தப்பட்டிருப்பது 170 கோடி மட்டுமே. சென்ற நிதிநிலை அறிக்கையில் உணவுப் பதப்படுத்தும் துறைக்கு 60 திட்டப்பணிகள் அறிவிக்கப்பட்டன. அவற்றில் 45 மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இதேபோல் 100 திட்டப்பணிகள் அறிவிக்கப்பட்டு அவற்றில் 17 மட்டும்தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

இந்திய உணவு பதப்படுத்தும் துறை சர்வதேச அளவில் போட்டி போட வேண்டும் என்பதற்காக உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை 2022இல் அறிவிக்கப்பட்டது. 2027 வரையிலான ஐந்தாண்டுகளில் அதற்காக 10,900 கோடி ஒதுக்கப்பட்டது. இதன்படி ஆண்டொன்றுக்கு 1800 கோடி ஊக்கத்தொகை வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் வழங்கப்பட்டிருக்கும் ஊக்கத்தொகை வெறும் 1101 கோடி தான் .

இப்படி நிலை குழுக்களின் அறிக்கைகளை ஆராய்ந்து பார்த்தபோது எந்த திட்டமும் இலக்கை எட்டுவதில்லை. எந்த ஒரு ஒதுக்கீடும் முறையாக செலவிடப்படுவதில்லை அல்லது பயன்படுத்தப்படுவதில்லை என்பது வெட்ட வெளிச்சம் ஆகிறது. ஒன்றிய அரசின் இந்த நிதி நிலை அறிக்கை என்பது ஏனோதானோ என்பதற்கு இதைவிட சாட்சி எதுவும் தேவையில்லை. அதுமட்டுமல்ல அரசுத் துறையில் பணியிடங்கள் நிரப்பப்படுவதில்லை. உயர் நீதிமன்றங்களில் 61 லட்சம் வழக்குகளும், விசாரணை நீதிமன்றங்களில் 4.62 கோடி வழக்குகளும் நிலுவையில் இருக்கும் நிலையில், 1,114 நீதிபதி பணியிடங்களில் 332 பணியிடங்கள் இன்னும் நிரப்பப்படவில்லை. ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை என்பது ஒரு சடங்கு சம்பிரதாயம் என்பதற்கு இதைவிட உதாரணம் தேவையில்லை. ஆனால் தமிழகத்தின் நிதிநிலை அறிக்கை மக்கள் நலன் சார்ந்தது மக்களுக்கானது. தளபதியின் திராவிட மாடல் அரசு இது என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை.

# தி.மு.க. வழக்கறிஞர் அணி மாவட்ட வாரியாக நீதிமன்ற அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

13 ஆம் பக்கத் தொடர்ச்சி

துணை அமைப்பாளர்கள் - 1) எ. மாரிமுத்து 1/45எப் , எட்டடையாபுரம் ரோடு விளத்திகுளம் 2) எம். ராஜேஸ்வரி 6 /162, தெற்குத் தெரு மீனாட்சிபுரம் 3) எ. மகாராஜன் 2 /19, கீழரதி வீதி விளத்திகுளம் 4) எம். சித்ரா மேற்கு தெரு மார்த்தாண்டாம்பட்டி விளத்திகுளம் 5) ஆர். கல்யாணி ஜெயலெட்சுமி 5/438, கிழக்குத் தெரு கோவில் குமாரெட்டியாபுரம் எல். துரைச்சாமிபுரம்

### கோவில்பட்டி நீதிமன்றம்

தலைவர் - வி. சுந்தரபாண்டியன் 471 இ /5, பல்லக்கு ரோடு சண்முகசிகமணி நகர் கோவில்பட்டி

துணைத் தலைவர் - வி. அருண்காந்தி 18, காமராஜ் நகர் கழுகுமலை , கோவில்பட்டி தாலுக்கா

அமைப்பாளர் - எ. ஜெயசீலன் 182/5, பழைய காலனி தெரு கீழ ஈரால் எட்டடையபுரம் தாலுக்கா தூத்துக்குடி

துணை அமைப்பாளர்கள் - 1) கே. முத்துக்குமார் 65ஏ/2, வடக்கு தெரு கிழக்கு பாண்டாவர்மங்கலம் கோவில்பட்டி 2) எம். முனீஸ்வரி 83 /7 , போஸ் நகர் மந்திதோப்பு ரோடு கோவில்பட்டி 3) எஸ். ஆனந்திகுமார் 530/3 , 40, வீட்டுக்காலனி மேட்டுத் தெரு கூசாலிபட்டி 4) கே. சூர்யா 4/36, எஸ் பி எம் தெரு இளையரசனேந்தல் 5) ஜெ. சாரதா 20 சி /3, ஜோதி நகர் 4 வது தெரு கோவில்பட்டி

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

### கிருஷ்ணகிரி நீதிமன்றம்

தலைவர் - கே. மகேந்திரமணி ஆனந்த நகர் பெத்தாளப்பள்ளி பஞ்சாயத்து கிருஷ்ணகிரி துணைத் தலைவர் - எஸ். கோகுல கிருஷ்ணன் க. எண். 2/643, பேங்கர்ஸ் காலனி தொன்னை கொட்டாய் கிருஷ்ணகிரி

அமைப்பாளர் - கே. கலையரசன் க. எண். 7328, லண்டன் பேட்டை கிருஷ்ணகிரி

துணை அமைப்பாளர்கள் - 1) சி. காந்தி குரும்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல் கேஆர்பி டேம் வழி கிருஷ்ணகிரி 2) டி. விஜய் 1/370 பி, திருமலை நகர் தாண்டே குப்பம் கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம் 3) அஸ்வின் 14, போதிய நாயுடு தெரு காவேரிப்பட்டிணம் கிருஷ்ணகிரி 4) ஐ. பாருக் 3/144, மலையாண்ட அள்ளி காவேரிப்பட்டினம் கிருஷ்ணகிரி 5) பி. யஷ்வந்த் ராவ் க. எண். 44 ஜி, கோ-ஆப்ரேட்டிவ் காலனி கிருஷ்ணகிரி

### ஊத்தங்கரை நீதிமன்றம்

தலைவர் - கே. விஜயன் 87, காமராஜ் நகர் ஊத்தங்கரை கிருஷ்ணகிரி

துணைத் தலைவர் - என். சத்தியநாதன் கொண்டிரெட்டிப் பட்டி அன்தேரிப்பட்டி போச்சம்பள்ளி கிருஷ்ணகிரி

அமைப்பாளர் - டி. மோகன் 159, பி - காமராஜ் நகர் ஊத்தங்கரை கிருஷ்ணகிரி

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். சுதன் க. எண். 96, கே. பாப்பாரப்பட்டி மோட்டூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி 2) பி. சதீஷ் 3/80 எ - 1 அண்ணா சாலை கல்லாவி அஞ்சல் ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி 3) கே.வி. மணிராஜ் கந்தன் டவர், கடலூர் மெயின் ரோடு, ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி. 4) கே. ரஷ்யா என். மோட்டூர் கிராமம் மாடர அள்ளி அஞ்சல், பர்கூர் தாலுக்கா கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்

### போச்சம்பள்ளி நீதிமன்றம்

தலைவர் - ஜி. முருகன் க. எண். 39, புட்டமுப்பர்கொட்டாய் மத்தூர்

அமைப்பாளர் - எஸ். அஜித் குமார் க. எண். 1/247, பாளேத் தோட்டம் கிருஷ்ணகிரி

துணை அமைப்பாளர்கள் - 1) மகேந்திரன் கிருஷ்ணகிரி மெயின் ரோடு மத்தூர், போச்சம்பள்ளி (வ) கிருஷ்ணகிரி மாவட்டம் 2) டி. விவேகானந்தன் காந்திபுரம் கிராமம் அரசம்பட்டி அஞ்சல் போச்சம்பள்ளி (வ) கிருஷ்ணகிரி 3) வி. கிருபாநந்தன் க. எண். 375டி, திருவயலூர் போச்சம்பள்ளி தாலுக்கா கிருஷ்ணகிரி மாவட்டம்

## திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

### பள்ளிப்பட்டு நீதிமன்றம்

தலைவர் - கே. நாகராஜன் ஈச்சம்பாடி கிராமம், பள்ளிப்பட்டு அஞ்சல் மற்றும் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

துணைத் தலைவர் - எ. வேதமணி எண். 2/177, பாலாபுரம் கிராமம், ஆர்.கே.பேட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம். அமைப்பாளர் - எம். பொன்னுசாமி புதுப்பட்டு கிராமம், பள்ளிப்பட்டு அஞ்சல் மற்றும் வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) டி.சி. அண்ணாராவ் புதுப்பட்டு கிராமம், பள்ளிப்பட்டு அஞ்சல் மற்றும் வட்டம், திருவள்ளூர் மாவட்டம். 2) பி. ஹென்றி லாரன்ஸ் எண். 423/பி, மெயின் ரோடு, மேல் நெடுங்கல் கிராமம், பள்ளிப்பட்டு, திருவள்ளூர் மாவட்டம். 3) ஜெ. ராமதாஸ் புதுப்பட்டு கிராமம், பள்ளிப்பட்டு அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம். 4) கே. ஸ்டீபன் ஆஞ்சநேய நகர், பள்ளிப்பட்டு அஞ்சல், திருவள்ளூர் மாவட்டம். 5) வி.இ. ரவிக்குமார் வங்கனூர் காலனி, ஆர்.கே. பேட்டை வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

### திருத்தணி நீதிமன்றம்

தலைவர் - பி.டி. இரவிச்சந்திரன் சித்தூர் சாலை, திருத்தணி , திருவள்ளூர் மாவட்டம் - 631209.

துணைத் தலைவர் - எஸ். முருகேசன் எண். 105, சன்னதி தெரு, திருத்தணி நகரம், திருவள்ளூர் மாவட்டம். அமைப்பாளர் - எம். தாஸ் எண். 3/123, சரஸ்வதி நகர், திருத்தணி வட்டம்,

துணை அமைப்பாளர்கள் - 1) கே.ஜி. நாகபூஷணம் எண். 79, மேட்டுத் தெரு, திருத்தணி. 2) ஆர். வீரபத்திரன் சிறுகுமி காலனி மற்றும் அஞ்சல், திருத்தணி வட்டம், 3) டி. தீபக் சஞ்சய் எண். 136, சக்தி சாய் நகர், திருத்தணி - 631209. 4) யு. தியாகு எண். 190, பெரியார் நகர், திருத்தணி - 631209. 5) வி. வீரராகவன் ஜெ.ஜெ. இரவி நகர், முதல் தெரு, திருத்தணி - 631209.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 25-03-2025.

**என்.ஆர். இளங்கோ, எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை